முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.05.2024,** புதன்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கனே
தருமனே உன்பெருமை கூறி
அவனியில் துல்லிய ஆசிதனை
அறிவிப்பேன் குரோதி தகர் திங்கள்
2. திங்களிலே இருபானை திகதி புந்தி வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 25 ம் நாள், 08.05.2024, புதன்கிழமை)
தெரிவிப்பேன் கணநாதர் யானும்
இங்கனமே ஓங்கார உலகம் அமைய
இயம்பிடுவேன் அரங்கன் கேட்க
3. கேட்கவே சன்மார்க்க சங்க
குறைவிலா ஞான வழிகளை
தட்டாது உலகமக்கள் ஏற்று
தவராஜன் வழி தொடர்ந்து வர
4. வருகவே கலியுக மக்களுக்கு
வரமாக வாழுகின்ற காலமே
குருவருள் பலத்தின் அருமை
குறைவிலா கிட்டி உணரவே
5. உணரவே வேலவன் வழிபாடே
உயர்வழிபாடு என்கின்ற
ஞானமும் கூடி சிறந்து
ஞானிகள் வழிவழி தேறும்
6. தேறும் ஞானவான்களாகவும்
தேசிகன் தேடிய வண்ணம்
ஆறுமுகனார் தேர்வு செய்த
ஆற்றல்மிக்க ஞானிகளாக
7. ஆகவும் தேற்றம் கூடி
அரங்கன் அவதார நோக்கம்
ஆகவே சேவைகள் ஆற்றி
அறம் தரும வழிமுறைகொண்டு

8. கொண்டுமே உலகை மாற்றும்
குருவருள் திருவருள் துணைபட
தொண்டாற்றி சிறப்பர்
தேசமெங்கிலும் தொண்டர் படை
9. தொண்டர் படை அளவிலா
தெரிவிப்பேன் பெருகிவர
உண்டான தருமசக்தியும்
உரைப்பேன் அளவிலா வளர
10. வளரவே வையகம் தானும்
வளரும் மலரும் ஞானமாக
தளர்விலா நல்லோர் தலைமை
தவசி அரங்கன் வழிகாட்டலில்
11. வழிகாட்டலில் வையகம் தானும்
வருங்காலம் ஞான ஆட்சி
அழியாமை பெற்றவர்கள் வழி
அரங்கன் தயவால் நடந்தேறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–